# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

*********

**முறையீட்டு மனு எண்.433/2016/பே**
**ஆணை எண். 133 /2018 நாள் . 29 –05–2018**

திரு. ஏ. பிச்சை,
முன்னாள் பேரூராட்சி துணைத் தலைவர்,
அதிராம்பட்டினம் பேரூராட்சி,
அதிராம்பட்டினம் – 614 401. --- முறையீட்டு மனுதாரர்

பேரூராட்சி முன்னாள் தலைவர்,
அதிராம்பட்டினம் பேரூராட்சி,
அதிராம்பட்டினம்– 614 401. ----- எதிர்மனுதாரர்

**ஆணை.**

தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் பேரூராட்சி முன்னாள் துணைத்தலைவர் திரு. A.பிச்சை, என்பவரின் புகார் மனு, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். 4288/2013/இ.2/நாள். 10.05.2016ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் 12.05.2016ல் பெறப்பட்டது. மேற்படி புகார் மனுவிற்கு முறையீட்டு மனு எண். 433/2016 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீது உரிய அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் கீழ்கண்டவாறு இறுதி ஆணை வெளியிடப்படுகிறது.

திரு. A. பிச்சை முன்னாள் துணைத் தலைவர், அதிராம்பட்டினம் பேரூராட்சி தனது புகார் மனுவில் அதிராம்பட்டினம் பேரூராட்சி முன்னாள் தலைவர் மீது கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

1. அதிராம்பட்டினம் பேரூராட்சி முன்னாள் தலைவர் திரு.S.H. அஸ்லம் என்பவர் அதிராம்பட்டினம் 1வது வார்டு தோப்புக்காடு பகுதியில் உள்ள சுரைக்கா கொல்லையில் சர்வே எண்.279/1 மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பல ஏக்கர் பரப்பளவில் அரசு சட்ட விதிகளை மீறி நகர்ப்புற வளர்ச்சி அலுவலகத்தின் அனுமதி பெறாமலும் பேரூராட்சியின்

தடையில்லா சான்றினை பெறாமலும், பேரூராட்சித் தலைவர் பதவியினை தவறாக பயன்படுத்தி மனைப்பிரிவுகள் அமைத்து விற்பனை செய்து வருவதாகவும், இதன்மூலம் அரசுக்கு சேரவேண்டிய பல இலட்சம் ரூபாய் இழப்பீடு ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2. இவர் சிங்கப்பூர் அரசிடம் PR உரிமை பெற்று அரசின் அனுமதி பெறாமல் பலமுறை வெளிநாடு சென்று வந்துள்ளார் என புகார்.
3. பேரூராட்சி அலுவலர்களை செயல்பட விடாமல் அலுவலக பணிகளை முடக்குவது, பேரூராட்சியில் செயற்கையாக தண்ணீர் பிரச்சினை உருவாக்கி மக்களை போராட்டத்திறகு தூண்டி விடுவது
4. மேற்படி நபர் தனது தலைவர் பதவியை தவறாக பயன்படுத்தி அதிராம்பட்டினம் மற்றும் அதன் அருகே உள்ள நரசிங்கபுரம் சரவே எண் 8, 8/2 ஆகிய பகுதிகளில் உள்ள பல ஏக்கர் பரப்பளவில் தென்னை மர தோப்புகளை வாங்கி, மரங்களை அழித்து மனைப்பிரிவுகளாக பிரித்து DTP அனுமதி பெறமல் விற்பனை செய்வதும் மற்றும் பினாமிகள் பெயரிலும் இடங்களை வாங்கி விற்பனை செய்வதாகவும், அரசின் அனுமதி பெறாமல் மனைகளை விற்பனை செய்வதால் அரசுக்கு பல லட்சம் ரூபாய் வருவாய் இழப்பீடு என தெரிவித்துள்ளார்
5. அதிராம்பட்டினம் பகுதியில் சர்வே எண் 279/1, 279/2 பகுதியில் இவர் 64 மனைகளை விற்பனை செய்ய முயற்சி செய்தபோது தனனால் பேரூராட்சி செயல் அலுவலருக்கு கடிதம் கொடுத்து பேரூராட்சி செயல் அலுவலர் 25.02.2013ல் பேரூராட்சியின் தடையில்லா சான்று பெறாமல் பத்திரபதிவு செய்யக்கூடாது என அதிராம்பட்டினம் சார்பதிவாளருக்கு கடிதம் கொடுத்து பதிவினை தடை செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட புகார்களை தெரிவித்து விசாரணைக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 24.05.2016ம் நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரருக்கு தனது புகார் மனுவினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (மனுதாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்)விதிகள் 2015, விதி 6ல் நிர்ணயிக்கப்பட்டவாறு ரூ.10/-க்கான நீதிமன்ற வில்லை ஒட்டி தனது மனுவினை உரிய படிவம் 1ல் சமர்ப்பிக்க தெரிவித்து ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் தனது மனுவினை உரிய முறையில் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை.

இருப்பினும் இம்முறைமன்ற நடுவ 25.11.2016ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்கண்ட புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 25.11.2016ம் நாளிட்ட அழைப்பாணையில் மேற்கண்ட புகார் மனு குறித்து தனது விளக்கத்தினை பதிவு செய்ய முறையீட்டு மனுதாரரை இம்முறைமன்ற நடுவத்தில் 26.12.23016 அன்று ஆஜராக தெரிவித்து ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் தனது விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் மேற்கண்ட தேதியில் ஆஜராகாதோடல்லாமல் அதற்கான எந்த விளக்கத்தினையும் தெரிவிக்கவில்லை.

இம்முறைமன்ற நடுவ 22.01.2018ம் நாளிட்ட அழைப்பாணையில் அதிராம்பட்டினம் பேரூராட்சி முன்னாள் தலைவர் திரு.S.H.அஸ்லம் அவர்களை மேற்படி புகார் மனுவிற்கான தனது விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 27.03.2018 அன்றுஆஜராகக் கோரி ஆணையிடப்பட்டது.

27.03.2018 அன்று அதிராம்பட்டினம் பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் திரு. S.H. அஸ்லம் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"………தான் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரை பேரூராட்சி மன்றத் தலைவராக இருந்ததாகவும், தனது வியாபாரம், குடும்பம் யாவும் சிங்கப்பூரில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். உள்ளூரில் தான் பேரூராட்சிமன்றத் தலைவராக நின்று வெற்றிபெற்றதாகவும் மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் Real Estate தொழில் எதுவும் செய்யவில்லை எனவும் தெரிவித்துள்ளார். முன்னாள் பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு. பிச்சை அவர்களின் மனு விவரம் தனக்கு தெரியும் எனவும், மனுவில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைக்கு மாறானவை எனவும் தெரிவித்துள்ளார். சிங்கப்பூரில் இருப்பதாக கூறியது மட்டும் உண்மை எனவும் தெரிவித்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள நரசிங்கபுரம் கிராமம் சர்வே எண் 8, மற்றும் 8/2 உள்ள நிலம் தனது நண்பர் திரு. ரவியுனுடைய நிலம் எனவும், தனக்கு அந்த நிலத்திற்கு பவர் கொடுத்ததால் பிரச்சினை ஏற்பட்டதும் தான் அதிலிருந்து விலகிவிட்டதாக தெரிவித்துள்ளார். அதன்பின்னர் தான் அதில் தலையிடவில்லை எனவும், அதிராம்பட்டினம் பகுதியில் உள்ள நிலம் தனது தாய் வழி சொத்து எனவும் தெரிவித்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள நிலத்தில் இதுவரை எந்த இடத்திலும் மனையாக்கி விற்கவில்லை எனவும், 1 1/2 வருடத்தில் 7 செயல் அலுவலர்கள் பணி மாற்றம் செய்தமைக்கு தான் காரணம் இல்லை எனவும், தான் எந்த Real Estate தொழிலும் செய்யாத நிலையில் நிதி இழப்பு ஏற்பட்டது என்ற கேள்வி எழவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மனுவில் இணைத்துள்ள புகைப்படத்தில் உள்ள தேநீர் நிகழ்ச்சி என்றும் நிகழ்வு மட்டும் நடந்தது எனவும், ஆனால் அதன் பின்னர் எந்த மனையும் அமைத்து விற்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள அனைத்து புகார்களும் உண்மையில்லை எனவும், இந்த புகார் மனு கட்சி ரீதியாக போடப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார். தான் அதிராம்பட்டினம் பேரூராட்சித் தலைவராக பதவி வகித்த காலத்தில் 5 மாதத்திற்கு ஒரு முறை வெளிநாடு செல்லும்போது மாவட்ட ஆட்சியரிடம் எழுத்து பூர்வமாக எழுதி கொடுத்து அனுமதி பெற்றுத்தான் சென்றதாகவும் தனது வாக்குமூலத்தில் அதிராம்பட்டினம் முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் தெரிவித்துள்ளார்.

அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி புகார் மனுவிற்கான தனது கடித ந.க.எண்.247/2018/அ.1/நாள்.26.03.2018ன் மூலம் தனது விளக்க அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் பேரூராட்சிமன்ற முன்னாள் துணைத் தலைவர் திரு.ஏ.பிச்சை என்பவர் பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவரான திரு S.H.அஸ்லம் என்பவர் தோப்புக்காடு பகுதியில் உள்ள சுரைக்கா கொல்லையில் சர்வே எண் 279–1 ல் 164 மனைகள் போட்டுள்ளதாக புகார் செய்துள்ளதாகவும் மேற்படி மனு மீதான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் அவர்களின் மனைப்பிரிவு அங்கீகாரம் பெறப்பட்டவுடன்

மனைகள் பத்திரப் பதிவு செய்ய 25.02.2013ம் தேதியிட்ட கடிதம் மூலம் அதிராம்பட்டினம் சார் பதிவாளருக்கு தெரிவித்ததாகவும், இதற்கிடையில் மேற்படி இடத்தினை மனைப்பிரிவுகளாக பிரிக்காமல் முழுவதுமாக இரு தனி நபர்களுக்கு விற்பனை செய்துள்ளதாக விசாரணையில் தெரியவருவதாக தனது அறிக்கையில் அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 10.04.2018ம் நாளிட்ட அழைப்பாணையில், அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலரை மேற்படி புகார் மனு சம்பந்தமாக தனது விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 14.05.2018ல் ஆஜராக தெரிவித்து ஆணையிடப்பட்ட து.

அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவதில் 14.05.2018 அன்று ஆஜராகி மேற்படி புகார் மனுவிற்கான தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........தான் 03.07.2017 முதல் அதிராம்பட்டினம் பேரூராட்சியில் செயல் அலுவலராக இருந்து வருவதாகவும், ஆனால் மனுவில் குறிப்பிட்டுள்ள காலத்தில் தான் மேற்படி பேரூராட்சியில் பணியாற்றவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மனுதாரர் திரு ஏ.பிச்சை அவர்கள் துணைத் தலைவராக 25.10.2011 முதல் 24.10.2016 முடிய அதிராம்பட்டினம் பேரூராட்சியில் பதவி வகித்துள்ளதாகவும், அவருடைய மனு குறித்த விவரம் தனக்குத் தெரியும் எனவும் தெரிவித்துள்ளார். மனுவுடன் இணைத்துள்ள புகைப்படத்தில் உள்ள அறிவிப்பு பலகையில் குறிப்பிட்டுள்ள ஹாஜி முகம்மது அலி ஆலிம் நகர் அதிராம்பட்டினம் பேரூராட்சி பகுதியில் இல்லை எனவும், அதிராம்பட்டினம் பேரூராட்சி பகுதியில் முன்னாள் தலைவர் எந்தவிதமான அங்கீகாரம் பெறாத மனைகளை விற்பனை செய்யவில்லை என்ற விவரம் தன்னால் நேரடியாக விசாரிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். மனுதாரருடைய மனுவில் உள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை எனவும், தலைவர் சிங்கப்பூரில் குடியிருப்பு பெற்ற விவரம் தனக்கு தெரியாது எனவும் தெரிவித்துள்ளார். காரணம் மேற்படி முன்னாள் தலைவர் தற்போது தலைவர் பதவியில் இல்லை எனவும், இதற்கு முன்னர் தான் 2009-2010ல் ஒரு ஆண்டு செயல் அலுவலராக அதிராம்பட்டினம் பேரூராட்சியில் பணிபுரிந்ததாகவும், முன்னாள் தலைவர் மற்றும் துணைத் தலைவர் இருவருக்குமிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் அடிப்படையில் இந்த மனு அனுப்பப்பட்டுள்ளது எனவும், மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை, அதிராம்பட்டினம் பேரூராட்சி முன்னாள் தலைவர் மற்றும் செயல் அலுவலர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவினை உரிய முறையில் சமர்ப்பிக்கக் கோரி ஆணையிட்டும் தனது மனுவினை உரிய முறையில் சமர்ப்பிக்கவில்லை. மேலும் தனது புகார் மனு குறித்தான விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்யக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராக தெரிவித்தும் ஆஜராகாததோடல்லாமல் அதற்கான எந்த விளக்கத்தினையும் முறையீட்டு மனுதாரர் தெரிவிக்கவில்லை. அதிராம்பட்டினம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவரால் அதிராம்பட்டினம் பகுதியில் சர்வே எண் 279-1ல் 164 எண்கள் மனைப்பிரிவுகள் அமைக்கப்பட்டதாக தெரிவித்த புகார்கள் குறித்து

விசாரித்ததில் மேற்படி இடத்தில் எந்த மனைப்பிரிவும் அமைக்கப்படாமல் மேற்படி இடம் முழுவதும் இரு தனி நபர்களுக்கு விற்பனை செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் புகார் மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள புகைப்படத்தில் குறிப்பிட்டுள்ள ஹாஜி அலி ஆலம் நகர் என்ற பகுதி அதிராம்பட்டினம் பேரூராட்சியில் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் அதிராம்பட்டினம் பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் எந்த இடத்திலும் அனுமதி பெறாத மனைப்பிரிவுகள் அமைத்து விற்பனை செய்யவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் அதிராம்பட்டினம் பேரூராட்சி முன்னாள் தலைவர் தனது வாக்குமூலத்தில் தான் தனது பணிக்காலத்தில் 5 மாதங்களுக்கு ஒரு முறை சிங்கப்பூர் சென்று வந்ததாகவும், அவ்வாறு செல்லும்போது மாவட்ட ஆட்சியரிடம் எழுத்து பூர்வமாக எழுதி கொடுத்து அனுமதி பெற்றபின்னரே சென்றதாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்கண்ட விவரங்களின் அடிப்படையிலும் மனுதாரர் தனது மனுவினை உரிய முறையில் சமர்ப்பிக்கத் தெரிவித்தும் சமர்ப்பிக்காத நிலையிலும் தனது புகார் மனு குறித்த விவரத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகாததை கருத்தில் கொண்டு மேற்படி புகார் மனு முகாந்திரமற்றது எனக் கருதி தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு மே திங்கள் 29 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்.

1.திரு. ஏ. பிச்சை,
முன்னாள் பேரூராட்சி துணைத் தலைவர்,
அதிராம்பட்டினம் பேரூராட்சி,
அதிராம்பட்டினம் – 614 401

2. பேரூராட்சி முன்னாள் தலைவர்,
அதிராம்பட்டிணம் பேரூராட்சி,
அதிராம்பட்டிணம்– 614 401.

3.செயல் அலுவலர்,
அதிராம்பட்டினம் பேரூராட்சி,
அதிராம்பட்டினம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

4.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
தஞ்சாவூர்

5.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை – 108.